THE LIFE OF THE REV: S. PAUL, RAO SAHIB.

கனம் S. பால் ராவ் சாகிப் ஐயரவர்களின் ஜீவிய சரித்திரம்.

பிறப்பு. கனம்: S. பால் ராவ் சாஹிப் ஐயரவர்கள், திருநெல்வேலி ஜில்லா, மெஞ்ஞானபுரத்திற்குச் சமீபமாயிருக்கும் பாட்டக்கரை என்னும் கிராமத்தில், 1844 ஜூன் 15உ பிறந்தார்கள். திருநெல்வேலி சர்ச்சு மிஷியோனில், பக்தியுள்ள சுதேச மிஷனெரியாக, அநேக வருஷம் திவ்விய பணிவிடை நடப்பித்து, வரம்பெற்ற சாதுரியப் பிரசங்கியெனச் சொல்லிக்கொள்ளப்பட்ட கனம்: தானியேல் பவுல் ஐயரவர்கள் இவர்களுடைய தகப்பனார்.

படிப்பு. கனம்: பால் ஐயரவர்கள் பால்யமாயிருக்கையில், தங்கள் தகப்பனார் உபதேசியார் அலுவல்பார்த்த கிராமத்தில், மூலாதாரக் கல்வி கற்றுக்கொண்டார்கள். 12 வயதாயிருக்கையில், மெஞ்ஞானபுரம் போர்டிங் ஆண்பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டு, அவ்விடம் தமிழும் இங்கிலீஷும் கற்றுவந்தார்கள். அங்கிருக்கையில், கனம்: J. D. தோமாஸ் ஐயரவர்களும், கனம்: J. B. தோமாஸ் டாக்டரவர்களும் வாலிபமாயிருந்தபோது, அவர்கள் இங்கிலிஷ் கற்றுவந்தார்கள். அவர்கள் 17 வயதாயிருக்கையில், 1861 பெப்ருவரி 25உ பாளையங்கோட்டை பிரிப்பரான்டைக் கல்விச்சாலைக்கு அனுப்பப்பட்டார்கள். அக்காலத்தில், அந்தக் கல்விச்சாலைக்குத் தலைமையாயிருந்த மகா கனம்: சார்ஜென்ற் அத்தியக்ஷரவர்களின் கையின்கீழ் வேதசாஸ்திரங்கற்று, அவ்விடத்துப் படிப்பை, 1863 மேய் 1உ முடித்தார்கள்.

உத்தியோகம். அவர்கள் முதலாவது 1863 மேய் 6உ, மெஞ்ஞானபுரம் சர்க்கிளைச்சேர்ந்த சத்தியநகரத்துக்கு ரீடராக நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் திருநெல்வேலிஜில்லாவில் 1864 ஜூன் 24உ வரை ரீடராகவும், உபாத்தியாயராகவும் வேலைபார்த்து வந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் முன்னுக்கு வரக்கூடிய ஒரு ஆசாமியாக விளங்கினார்கள். மாசாந்தரக் கூட்டங்களில், இவர்கள் எழுதி பிரசங்கங்களைக் கேட்பது, கனம்: J. தோமாஸ் ஐயரவர்களுக்கு மிகப்பிரீதியாயிருந்தது. அவ்வித பிரசங்கங்களில், அவர்கள் சுதாவாயெடுத்துரைத்த நூதனக்கருத்துகள் அமைந்திருந்ததை மேலதிகாரிகள் கருத்தாய் கவனிக்க நேரிட்டது. அவர்களுடைய பிரசங்கத்தில் காணப்பட்ட சில நூதனக்கருத்துகளை, கனம்: தோமாஸ் ஐயரவர்களே கவனித்து, அவைகளைத் தாங்கள் அதற்குமுன் கேள்விப் பட்டதில்லையென்றும், புதிய அர்த்தமாகத் துலங்

குகிறதென்றும், வெளிப்படையாய்ச் சொன்னார்கள். இவர்கள் பிற்காலம் சபைக்கு மிகவும் பிரயோஜனமுள்ளவராக எழும்பக்கூடுமென்ற ஒரு எண்ணம், கனம்: தோமாஸ் ஐயரவர்களின் மனதில் அழுந்தப் பட்டதினால், இவர்களைச்சென்னபட்டணத்துக்கு அனுப்பவேண்டுமென்று தங்கள் உள்ளத்தில் தீர்மானித்துக் கொண்டார்கள். இவர்களுடைய தகப்பனாரவர்கள் 1860-ம் வருஷம் கர்த்தருடைய ராஜ்யத்திற்குட் பிரவேசித்தபடியால், இவர்களுடைய தாயார் இவர்களைத் தூரமான இடத்திற்கு அனுப்பிவைக்க இஷ்டப்படவில்லை. ஆனால் கனம்: தோமாஸ் ஐயரவர்கள், அநேகம் ஆசாமிகளின் நடுவிலிருந்து நான் இவனை விசேஷித்த பிரகாரமாய்த் தெரிந்தெடுக்கிறேன் என்றும், பிற்காலத்தில் இவர் பேர்பெற்றுள்ளவராய் விளங்கி, சபைக்கு அதிக நன்மையை உண்டாக்குகிறவராயிருப்பார். ஆதலால் தடை சொல்லக்கூடாதென்றும், வ[...] அந்த அம்மாள் இணங்கி[...]காறதென்றும் சொன்னதின் [...] இணங்கினார்கள். அதன்பேரால் இவர்கள் 1865 ஜனுவரி 14௳ சென்னபட்டணத்துக்கு அனுப்பப்பட்டு, அங்கே கனம்: W. T. சத்தியநாதன் ஐயரவர்கள் கைக்குள் ஏறக்குறைய 3 வருஷம் உபதேசியராக வேலைபார்த்தார்கள். அப்பால் திருநெல்வேலி C. M. S. மிஷியோனில், திவ்வியபணிவிடைசெய்த வேறொரு சுதேச மிஷனெரியாகிய, கனம்: பரமானந்தம் சிமியோன் ஐயரவர்களின் மூத்தகுமா[ர]த்தியை 1868-ம் வருஷம் மணம்புரிந்தபின், கனம்: R. C. மெக்டான[ல்]ட் ஐயரவர்களின் விசாரணைக்குள் இவர்கள் அலுவல்பார்க்க நேரி[ட்]டது. அவர்கள் சென்னபட்டணத்திலுள்ள, மிஷியோன் பள்ளிக்[...]ளுக்கு இவர்களை விசாரணை உபாத்தியாயராக நியமித்தார்கள். 18[...]74-ம் வருஷம் ஆகஸ்துமாசம் 2௳ உதகமண்டலத்துக்கு இவர்கள் அ[னு]ப்பப்படும் வரைக்கும் இந்த வேலையைப் பார்த்துவந்தார்கள். மிஷியோன் பள்ளிக்கூட விசாரணை உபாத்தியாயர் அலுவலில், நானாவித வேலைகள் பார்க்கவேண்டியதாயிருந்தபோதிலும், அவர்கள் தங்கள் வேதசாஸ்திரப்படிப்பை விர்த்திபண்ணிக்கொண்டுவருவதில் ஜாக்கிரதையாயிருந்தார்கள். கண்காணியார் வேதாகமப் பந்தயப் பரீக்ஷையில் 1869-ம் வருஷம் 2-வது பரிசும், 1873-ம் வருஷம் 1-வது பரிசும் இவர்களுக்குக் கிடைத்தது. இவர்கள் சாவகாசமாயிருக்கும் சமயங்களில், ஒத்தைத்தாள் பிரிதிகளும், திராக்ட்டுகளும் எழுதி, அவைகளில் சிலவற்றிற்கு பரிசும் பெற்றுக்கொண்டார்கள். அப்புறம் குருத்தொழிலுக்குக் குறிக்கப்பட்ட பரீக்ஷைகளில் இவர்கள் ஒப்பேறி 1874 அக்றோபர் 11௳ உதவிக் குருப்பட்டமும், 1876 ஜனுவரி 6௳ குருப்பட்டமும் பெற்றுக்கொண்டார்கள். 1883 நொவெம்பர் 1௳ வரை உதகமண்டலம் சபையை விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அங்கிருக்கையில் மகா கனம்: சென்னை

அத்தியக்ஷரவர்களின் விசேஷித்த உத்தரவின்பேரில், கள்ளிக்கோட்டையில் ஒரு தமிழ்ச் சபையை ஸ்தாபித்தார்கள். உவை மிஷியோனிலும் அதிகத் தேர்ச்சியுண்டாயிற்று. பின்பு சென்னைய... வடக்குப் பாஸ்த்றரேற்றுக்கு மாற்றப்பட்டபோது, அவர்களுடைய குருத்தொழிலின் கீழ் அவ்விடம் சபை ஆவிக்குரிய விஷயங்களில் தழைத்தோங்கினதுமன்றி, பணவிஷயத்திலும் வளர்ந்துவந்தது.

வடதிருநெல்வேலியில் C. M. S. மிஷியோனை மேல்விசாரணை செய்து வந்த சுதேச மிஷனெரியாகிய கனம்: V. வேதநாயகம் ஐயரவர்கள் மறுமைக்குட்பட்டபடியால், கனம். பால் ஐயரவர்கள் 1897 நொவெம்பர் 18௳ தெரிந்தனுப்பப்பட்டார்கள். இவர்கள் சாட்சியாபுரத்தில் ஸ்தாபகமாகி, அக்காலத்தில் இந்த வடதிருநெல்வேலியை விசாரித்து வந்த கனம்: A. K. பின்னிமோர் ஐயரவர்களுக்கு ஆலோசனைக்காரராகவும், தேசாந்தர சுதேச மிஷனெரியாகவுமிருந்தார்கள். 1890-ம் வருஷம் அவர்கள் வடதிருநெல்வேலி C. M. S. சர்ச்சுக்கவுன்சிலுக்கு பிரதி முதலாளியாக நியமுகம் பெற்றிருந்தார்கள். பின்பு 1892-ம் வருஷம், சாக்ஷியாபுரம் வாகைக்குளம் ஆகிய இரண்டு சர்க்கிளுக்கும், சென்னைபட்டணம் கரஸ்பாண்டிங் கமிற்றியார் அவர்களை முதலாளியாக நியமிக்க, அவர்க்ள் மரணபரியந்தம் அப்படியேயிருந்து நடபடிக்கை நடத்தினார்கள். கனம்: J. பார்ட்டன் ஐயரவர்கள், கனம்: T. உவாக்கர் ஐயரவர்கள், கனம்: E. S. கார் ஐயரவர்கள் ஆகிய இம்மூன்று மிஷனெரிமார்களின் மேல்விசாரணைக்குள், அவர்கள் வடதிருநெல்வேலியில் மிகவும் பிரயோஜனமான ஊழியத்தை நடப்பித்திருக்கிறார்கள். அவர்கள் நடப்பித்திருக்கும் பிரயோஜனமான கிரியையே அதைப்பற்றிப் பேசும். தவச உற்சவத்தை ஏற்படுத்துவதற்கு முதல் முதல் ஆலோசனை சொன்னவர்கள் இவர்களே. அந்தப்படி தவச உற்சவம் 1891 ஜூன் மாசம் சாட்சியாபுரத்தில் முதல் தடவையாகக் கொண்டாடப்பட்டது. அதின்பின் இவ்வித உற்சவம், திருநெல்வேலியின் பல இடங்களில் மாத்திரமல்ல, இந்தச் சென்னை இராஜதானியின் பற்பல இடங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டு, நடந்தேறி வருகிறது. 1894 ஏப்பிரல் 24௳ இவர்கள் சென்னபட்டணம், மகா கனம் லார்ட் பிஷப் அவர்களுக்கு ஆனரெரி சாப்பிளேனாக நியமிக்கப்பட்டார்கள். அவர்கள், இவர்களை இந்த உத்தியோகத்திற்கு நியமித்தபோது பின்வருகிறபடி கடிதம் எழுதினார்கள்:—

"என் பிரியமுள்ள மிஸ்றறர் பாலுக்கு எழுதுகிறதாவது. உமது குண நடத்தையையும், ஊழியத்தையும், நான் அங்கீகாரஞ் செய்திருக்கிறேனென்பதைக் காண்பிக்க என்னுடைய சாப்பிளேன்மார்களில் ஒருவராக உம்மை நியமிக்க இடங்கொடும்"

மேலும் திருநெல்வேலி-மதுரை மகா கனம் அத்தியக்ஷரவர்களுக்கும் அவர்கள் ஆனரெரி சாப்பிளேனாக நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

அவர்கள் நடப்பிப்பதற்கு, பலவித உத்தியோகங்கள் அவர்களுக்கிருந்தன. கண்காணியார் வேதாகமப் பந்தயப் பரீக்ஷைக்கும், பட்டாபிஷேகம்பெற ஆயத்தப்படுகிறவர்களுக்கும் இவர்கள் அநேகவருஷங்களாகப் பரீட்சிக்கிறவர்களாயிருந்தார்கள். 1890-ம் வருஷமுதல் நற்போதகத்திற்கு ழுக்கிய பத்திராதிபராயிருந்தார்கள். C. M. S. மரண சகாயச்சங்கத்திற்கு இவர்கள் ஜெனரல் செக்ரற்றேரியாக இருந்தார்கள். அவர்களுடைய அரும்பிரயாசத்தினால்தான் இந்தச்சங்கம் மிகுதியாய்த் தற்காலமிருக்கும் நல்ல சிருக்குக் கொண்டுவரப்பட்டது. 1893-ம் வருஷம் பம்பாயில்கூடி (Decennial) தசாண்டு காண்பிரன்ஸ் கூட்டத்திற்கும், 1898-ம் வருஷம் அலகபாத்திற்கூடிய (Quinquennial) பஞ்சாண்டு காண்பிரன்ஸ் கூட்டத்திற்கும், 1900-ம் வருஷம் ஜனவரி மாசம் சென்னபட்டணத்திற்கூடிய தென்னிந்தியா காண்பிரன்ஸ் கூட்டத்திற்கும், தென்னிந்தியாவிலிருந்துபோன பிரதிகாரியஸ்தர்களில் இவர்கள் ஒருவர். சபைகளுக்குண்டாகும் வியவகாரியங்களைத் தீர்க்க இவர்கள் சென்னை மகாகனம் லார்ட் பிஷப் அவர்களாலும், திருநெல்வேலி மதுரை மகாகனம் அத்தியக்ஷரவர்களாலும், கமிஷனராகப் பல தடவை நியமிக்கப்பட்டு, அவைகளில் திருப்திகரமான முடிவு செய்திருக்கிறார்கள். தமிழ் ஜெபபுஸ்தகத்தையும் ஞானப்பாட்டுப் புஸ்தகத்தையும் திருத்தல் செய்யும்படி நியமிக்கப்பட்ட கமிற்றியில் இவர்கள் ஒரு முக்கிய மெம்பராயிருந்தார்கள். 1898 நொவெம்பர் 9உ இங்கு ஏற்படுத்தப்பட்ட கிளீனர்ஸ் யூனியனுக்கு முதலாளியாயிருந்து அதை நடத்தினார்கள்.

ஆக்கியோன். சுதாவாகப் புஸ்தகங்களும், திராக்ட்டுகளும், ஒத்தைத்தாள் பிரிதிகளும் எழுதுவதிலும், சன்மார்க்கப் புஸ்தக சங்கத்தார் கிறிஸ்துமாசம் 2உ உத்திக்கி சங்கத்தார், கிறிஸ்தவ கலைஞ்ஞான சங்கத்தார்க்கும் மத கல்வியபிவா[illegible] பார்த்துவந்தார்கள். வேளாவேளைகளில் தர்சு[illegible]விக்கூடி, சர்ச்சுமிஷன் சங்கத்தார் ஆகிய மூவர் [illegible] கொடுக்கும் புஸ்தகங்களைத் தமிழ்ப்படுத்துவதிலும், மால் பண்ணும்படி இவர்களுக்கு மிகுந்த அவாவும் விசேஷித்த வரமுமிருந்தது. கிறிஸ்தவர்களுக்கும், மகமதியர்களுக்கும், இந்துக்களுக்கும் பிரயோஜனமாக இவர்கள் அநேக ஒத்தைத்தாள் பிரிதிகளும், திராக்ட்டுகளும், புஸ்தகங்களும் எழுதியிருக்கிறார்கள். அவற்றின் விபரம் அடியிற்காட்டப்பட்டிருக்கிறது:—

	சுயமானது.	மொழிபெயர்ப்பு.	மொத்தம்.
ஒத்தைத்தாள் பிரிதிகள்	13	25	38
திராக்ட்டுகள்	21	104	125
புஸ்தகங்கள்	18	29	47
மொத்தம்.	52	158	210

சுயமாய் எழுதப்பட்டிருக்கும் புஸ்தகங்களில், ஆத்மநேசரின் அங்கமகத்துவம், வேதஸ்திரீகள், ஜெபபுஸ்தகச் சரித்திரம், ஜெப புஸ்தக திறவுகோல், வேத புருஷர் 3 பங்குகள், வேத உதாரணத்துடன் வேதமார்க்க

ப்பிரயாணம், கூடாரமும் தேவாலயமும், தெளிவான பிரசங்கம், கிறிஸ்துவின் ஜீவியம், தியான ஆலயம், தியானசோலை, வியாதிப்படுக்கைத் தோழன், துக்கசாகரத்தோணி, ஜாதிவித்தியாசமும் கிறிஸ்துமார்க்கமும் ஆகிய இவைகள் விசேஷமாய்க் கவனிக்கவேண்டியவைகள்.

அவர்கள் மொழிபெயர்த்த ஏராளமானவற்றுள்:— இங்கிலாந்து திருச்சபைச் சரித்திரம், பரதேசியின் மோட்ச பிரயாணம், சமலம், சகுணு, என் இராஜன், இராஜதயாளம், இராஜ கட்டளை, இஸ்லாம் மார்க்கம், குடும்ப ஜெபம், ஜெஸ்வீக்காளின் ஜெபம், ஆயாளும் துரைசானியும், காலைமணி, சிறு தலையணை, குழந்தை ஞானஸ்நானம், கர்த்தருடைய ஜெபப் பிரசங்கம் ஆகிய இவை அருமையானவை.

மேலும் மிஷியோன் கூட்டங்களில் அவர்கள் அருமையான பிரபந்தங்கள் எழுதி வாசித்திருக்கிறார்கள் அவைகளில்:— 1880—1890 வரையும் பத்து வருஷத்துக்குள்ள திருநெல்வேலி C. M S. சபையின் ஏற்றத்தாழ்ச்சி, தாலி, திருநெல்வேலிச் சபையின்சரித்திரம், சர்ச்சு மிஷியோன் முதலாம் நூற்றாண்டின் மரண சாதனம், சுய ஆதரவு ஆகிய இவைகள் விஷேசமானது.

கனம்: மர்டாக் துரையவர்களின் விருப்பப்படி "கிறிஸ்துவைப் போல் ஜீவித்தல்" என்னும் பேருள்ள ஒரு அருமையான புஸ்தகத்தைத் தம் சுயமாய் எழுத ஆரம்பித்துவைத்திருந்து, முற்றுப்பெறாமல், அவர்கள் மேசையில் விடப்பட்டிருந்தது. இதை எழுத கடந்த ஆறுமாசக் காலமாய் அதற்குவேண்டிய ஆதாரங்களைத் தேடி, அதின்பேரில் ஆழ்ந்த யோசனை செலுத்தியிருந்தார்கள். அதை எழுத ஆரம்பித்தவுடனே சட்டென்று வியாதிப்பட்டு, மறுமைக்குட் பிரவேசித்தார்கள்.

கீர்த்திகள். கனம்: பால் ஐயரவர்கள் சபையின் வாழ்வையும் சுதேசக் கிறிஸ்தவர்களின் க்ஷேமத்தையும் வெகுவாய்க் கருதியதுமல்லாமல், இராஜாங்க விஷயமாகவும் பிரஜைகளுக்குப் பிரயோஜனமாயிருந்தார்கள். ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு தாலூகா போர்டு மெம்பராகவும், திருநெல்வேலி ஜில்லா போர்டு மெம்பராகவும் நியமுகம்பெற்று, அவ்விதக் கூட்டங்களில் நல்ல ஆலோசனை கொடுத்து வந்தார்கள். பிரஜைகளின் பிரயோஜனத்திற்கென்று இவர்கள் எழுதிய அபரிமிதமான புஸ்தகங்களை நன்குமதித்து, மாக்ஷிமைதங்கிய சக்கிரவர்த்தினியவர்கள் 1898-ம் வருஷம் இவர்களுக்கு "ராவ் சாஹிப்" என்னும் பட்டங்கொடுத்து இவர்களைக் கனப்படுத்திய விஷயம் மிகவும் புகழப்படத்தக்கது. இந்தக் கண்ணியமான பட்டத்தைப் பெற்றுக்கொள்ள இவர்கள் தகுதியுள்ளவர்கள்தானென்பது சில பெரியோரின் வாசகங்களால் தெளிவாகிறது. இது சம்பந்தமாய் சென்னை மகாகனம்: லார்ட் பிஷப் அவர்கள் 1898 மேய் 23உ எழுதிய கடிதத்தின் சரியான நகல் அடியில் வருகிறபடியிருக்கிறது:—

“சக்கிரவர்த்தினி இராக்கினியவர்களால் ஜனன நாள் கனமளிக் கப்பட்டவர்களுக்குள் நீரும் ஒருவர் என்பதைக்கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். மூன்று நாலு வருஷங்களுக்கு முன்னே, கந்தர்புரி ஆர்ச்சு பிஷப்பவர்களிடமிருந்து நான் உமக்கு ஒரு டிவினிற்றி டிகிரிப் பட்டம் வாங்கிக்கொடுக்க விரும்பினேன். ஆனால் அதற்குச்செலுத்த வேண்டிய பீஸ் தொகை (ஏறக்குறைய ரூ. 900) தடையாயிருந்தது. கிறிஸ்துமார்க்கப் போதனைகளடங்கிய உமது புஸ்தகங்களினால் நீர் உமது தேசத்தாருக்குச் செய்திருக்கும் நல்ல ஊழியம் தற்சமயம் நன்கு மதிக்கப்பட்டிருக்கிறதென்பதை இப்போதுகண்டு, நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆர்ச்டீக்கனவர்கள் உம்மைப்பற்றிக் கவர்னரவர்களுக்கு சிபார்ஸ்செய்ததின்பேரில் அது ஆகியிருக்கிறதென்று நம்புகிறேன். உமது போதனைகளினாலும், எழுத்துகளினாலும், நமது பரம எஜமானை மகிமைப்படுத்த, கர்த்தர் உமக்கு நீடித்த ஆயுளை அருளிச்செய்வாராக”. *

அடியில் வருவது திருநெல்வேலி, மதுரை பிஷப்பவர்களாகிய மகாகனம் அத்தியக்ஷரவர்களிடமிருந்து அதே தெய்தியில் அனுப்பப் பட்ட கடிதத்தின் சரியான நகலின் பாகம்:—

“சக்கிரவர்த்தினி இராக்கினியவர்களின் ஜனனநாள் கனங்களுக்குள் உமது பெயர் வருவதைக்கண்டு, நானும் பூரிப்படைந்து, உமக்களிக்கப்பட்டிருக்கும் ராவ்சாஹிப் பட்டத்திற்காக நான் மனமகிழ்ச்சியுடன் உம்மை வாழ்த்துகிறேன். இந்தியாவின் ஜனங்களுடைய சன்மார்க்க ஆவிக்குரிய நன்மைக்கென்று செய்யப்பட்ட வேலையை நமது சக்கிரவர்த்தினியவர்கள் அங்கீகாரஞ்செய்திருக்கிறது மிகவும் நன்றி செலுத்தத்தக்க விஷயமே.”

சங்கைபொருந்திய சென்னை ஆர்ச்சு டீக்சனவர்கள் 1898 ஜூன் 11௳ பின்வருமாறு எழுதுகிறார்கள்:—

“கனமருளப்பெற்றவர்களின் ஜாபிதாவில் உம்முடைய பெயரைக் கண்டு, நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். தென் இந்தியாவில் நீர் செய்திருப்பதும், செய்துகொண்டுவருகிறதுமான வேலை மிகவும் விலை பெற்றதாகையால், அது அங்கே இருக்கவேண்டியது முற்றிலுஞ்சரியே. இந்தியாவில் இந்தக் கனத்தைப்பெற்றுக்கொண்ட முதலாவது சுதேச குரு நீர்தானல்லவா?”

வியாதியும் மரணமும். 1900 மார்ச்சு 3௳ சனிக்கிழமைவரையும் கனம் பவுல் ஐயரவர்கள் நல்ல சுகமும் பெலனுமுள்ளவர்களாயிருந்தார்கள். மறு நாள் ஞாயிறு அதிகாலையில் ஜுரம் ஆரம்பிக்க, காசநோயும், கபால வியாதியுங் கலந்து, வயித்தியர்களின் எவ்வித பிரயாசத்துக்கும், வியாதிமடங்காமல் அதிகரித்து, அவர்கள் வியாதிப்பட்ட 8ம் நாளாகிய, மார்ச்சு 11௳ ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் ஒரு மணிக்கு, சமாதான

தோடும், சந்தோஷத்தோடும், தங்கள் பரம் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள். வழக்கமாய் அவர்கள் புஸ்தகம் எழுதும் வேலையிலும், முக்கியமாய் அவர்கள் மரணத்துக்கு முந்திய வாரத்தில் எழுதத்தொடங்கிய விசேஷமான புஸ்தக விஷயத்திலும், ஆழ்ந்தயோசனையும் அகன்ற ஆராய்ச்சியும் அவசியமாயிருந்ததால் அவர்கள் மூளை சிதைந்து, இந்த வியாதிக்கு அது மூலகாரணமாயிருந்ததென்பது வயித்தியர்களின் அபிப்பிராயம். வேளாவேளைகளில் அவர்களுக்கு அறிவுமயக்கமுண்டான போதிலும் அவர்கள் சொஸ்த புத்தியுள்ளவர்களாயிருந்து, தங்களைப் பார்க்க வந்தவர்களை இனமறிந்து, அவர்களோடு சாவதானமாய்ப் பேசினார்கள். அவர்கள் வியாதிப்படுவதற்கு முந்திய நாளாகிய சனிக்கிழமை இரவு சுமார் பன்னிரண்டு மணிக்கு சாட்சியாபுரத்தில் அவர்களுடைய சபையைச் சேர்ந்த சில வியாதியஸ்தரைச் சந்தித்து அவர்களுக்குவேண்டிய உதவிபுரிந்ததுதான் அவர்களுடைய குருத்தொழிலின் கடைசி ஊழியமாகவிருந்தது. அவர்கள் வியாதிப்படுக்கையிலிருக்கையில், தங்கள் குடும்பக்காரியங்களைப்பற்றி யாதொரு வார்த்தையும் பேசவில்லை. ஆனால் அவர்களுடைய சிந்தனையும் பேச்சுமெல்லாம், மிஷியோனையும் சபையையுமடுத்ததாகவும், பரம காரியத்தைப்பற்றியதாகவுமிருந்தது. அவர்கள் மரணத்தைச் சந்திக்க எப்போதும் ஆவலோடு எதிர்நோக்கிக்கொண்டிருந்தார்கள். கடைசியாக அவர்கள் தங்கள் வீட்டைச் சுட்டிக்காட்டி இது என் வீடல்ல, இதைப்பார்க்கிலும் அலங்காரமான மாளிகை எனக்கு ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்துக்கு நான் போகவேண்டும். கோவில் மணியடிக்கிறது. கோவிலுக்கு நான் போகிறேன்’’ என்று சொன்னார்கள். இவைகள்தான் அவர்களுடைய கடைசி வார்த்தைகள். பின்பு அவர்கள் உள்ளுக்குள் ஜெபித்தார்கள். அதற்கப்புறம் விசுவாசப் பிரமாணத்தையும், கர்த்தருடைய ஜெபத்தையும் வாய்க்குள்சொல்லி முடியவும் அவர்கள் ஆவி அகமகிழ்வுடன் ஆகாசப்பிரவேசமாயிற்று. அவர்களுடைய மரணம், அவர்கள் குடும்பத்துக்கு மாத்திரமல்ல, பொதுவாக திருநெல்வேலிச் சபைக்கும் விசேஷமாக வடதிருநெல்வேலிச் சபைக்கும் பெரிய நஷ்டமாகவிருக்கிறது. வேத ஆராய்ச்சியும், தியான சிந்தையும், ஜெபவாஞ்சையுமுள்ளவர்களாயிருந்தார்கள். சுதேசசபை ஆவிக்குரிய விஷயத்தில் தேர்ச்சியடைந்து சுய ஆதரிப்புக்கும், சுயாதீனத்துக்கும் வரவேண்டுமென்பது அவர்களுடைய முக்கிய கருத்தாயிருந்தது. அவர்கள் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட கடமைகளை, தேவ நாமத்துக்கு மகிமையாக ஊக்கத்தோடும், உண்மையோடும் நடத்திவந்தார்கள். அவர்களுடைய வியாதியும் மரணமும் சடிதியானதாயிருந்தாலும், அவர்கள் மரித்த 2ம் நாள், நமது சுப்பிரன்டென்டிங் மிஷனெரியவர்களாகிய கனம்: E. S. கார் M. A. ஐயரவர்கள் சாட்சியாபுரத்துக்கு வந்தபோது, கனம்: பால் ஐய

தோடும், சந்தோஷத்தோடும், தங்கள் பரம் இளைப்பாறுதலுக்குள் பிரவே சித்தார்கள். வழக்கமாய் அவர்கள் புஸ்தகம் எழுதும் வேலையினும், முக்கியமாய் அவர்கள் மரணத்துக்கு முந்திய வாரத்தில் எழுதத்தொடங் கிய விசேஷமான புஸ்தக விஷயத்திலும், ஆழ்ந்தயோசனையும் அகன்ற ஆராய்ச்சியும் அவசியமாயிருந்ததால் அவர்கள் மூளை சிதைந்து, இந்த வியாதிக்கு அது மூலகாரணமாயிருந்ததென்பது வயித்தியர்களின் அபிப் பிராயம். வேளாவேளைகளில் அவர்களுக்கு அறிவுமயக்கமுண்டான போதிலும் அவர்கள் சொஸ்த புத்தியுள்ளவர்களாயிருந்து, தங்களைப் பார்க்க வந்தவர்களை இனமறிந்து, அவர்களோடு சாவதானமாய்ப் பேசி னார்கள். அவர்கள் வியாதிப்படுவதற்கு முந்திய நாளாகிய சனிக்கிழ மை இரவு சுமார் பன்னிரண்டு மணிக்கு சாட்சியாபுரத்தில் அவர்க ளுடைய சபையைச் சேர்ந்த சில வியாதியஸ்தரைச் சந்தித்து அவர்க புவது மிகவும் வருத்தமென்று [illegible]ர்களுடைய குருத்தொழிலின் தப்படவும், அவருடைய ஸ்தானத்திற்கு ஒரு[illegible]டுக்கையிலிருக்கை தெரிந்துகொண்டு திட்டம்பண்ணவும் தயவுசெய்து ஜெபியு[illegible]யும் பேச

C. M. S. சுதேசப் போதகர்களில் ஒருவர் எழுதுகிறதாவது:—

"கனம்: S. பால் ராவ் சாஹிப் ஐயரவர்களின் எதிர்பாரா ஜல்தி மர ணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு, மிகவும் துக்கப்படுகிறோம். கடைசி யாக நாங்கள் அவர்களைப் பாளையங்கோட்டையில் பார்த்தபோது, இனி மேல் அவர்களை இந்தப் பூலோகத்தில் சந்தித்துக்கொள்ள முடியாதென்ற எண்ணம் எங்களுக்குச் சற்றெண்கிலுமுண்டாகவில்லை. காசநோய் அவ ர்களுக்கு முடிவையுண்டாக்குமென்றும் நினைக்கவில்லை. அவர்களை இழந்துபோனதை என்னவென்று சொல்ல. அவர்களுடைய இனத்தா ருக்கு மாத்திரமல்ல, பொதுவாகக் கிறிஸ்தவர்களெல்லாருக்கும், இது பெரிய நஷ்டம். டிஸ்ரிக்ட்டு சர்ச்சுக் கவுன்சிலுக்கும், மற்றுங்கூட்டங் களுக்கும் பெரிய நஷ்டமே. ஆலோசனைகேட்க விரும்பும் யாவருக்கும் இது மிகுந்த அங்கலாய்ப்பே. அவர்களுடைய சாயலை நாம் திரும்ப ஒருபோதும் காணமுடியாது. பூமியில் அவர்களுடைய அமிர்த சப்தம் அமர்ந்து போயிற்று. தீவிரமாயும், தாராளமாயும் எழுதும் அவர்களு டைய இறகுகள் புறம்பே கிடக்கின்றன. பெரும்பிளப்புண்டாக்கப் பட்டிருக்கிறது. அதை நிரப்பக்கூடியது யார்? அவர்களைப் பற்றிய ஞா பகம் ஒருபோதும் மறந்து போகக் கூடியதல்ல. இந்தப் பரம யாத்திரை யில், கிறிஸ்தவர்களின் பிரயோஜனத்திற்கென்று, அவர்கள் எழுதியி ருக்கும் ஏராளமான புஸ்தகங்களினாலே, அவர்கள் பெயர் தலைமுறை களுக்கும் நிலைத்திருக்கும். மேலான ஊழியத்திற்கென்று பரம எஜமான் அவர்களைத் தம்மண்டை யழைத்துக்கொண்டார். மகிமையிலே நாம் ஒரு வரையொருவர் கண்டு சந்திக்கும் அந்த நாளுக்குக் காத்திருக்கிறவர்க ளாய், அவர்களுடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து செல்வோமாக".

S. P. G. சுதேசப்போதகர்களில் ஒருவர் எழுதுகிறதாவது:—

கனம்: பால் ஐயரவர்கள் மரணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு, மிகுதி யும் துக்கப்படுகிறோம். இது இன சனத்தாருக்கும், சுய தேசத்தாருக்கும்,

சுதேசக் குருக்களுக்கும், எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும், சகல விஷயத்திலும் பெருந்துக்கமாயிருக்கிறது. அவர்களுடைய மரணம் சடிதியானதென்று தோன்றுகிறது. பாளையங்கோட்டையில், கடந்த மாசம் கூடிய டையோசிசன் காண்பிரென்ஸ் கூட்டத்தில், அவர்கள் பேசிய விதத்தை நான் நினைக்கும்போது, என்னவென்று சொல்ல. அவர்களுடைய மரணத்தில், சுயாதீன சுபாவமுள்ள குருவையும், தெளிவாய்ப் போதிக்கும் உண்மையுள்ள போதகரையும், சாதுரிய பிரசங்கியையும், சுய பாஷையில் பாண்டியத்தியமுள்ள நல்ல படிப்பாளியையும், வெகு சமர்த்துள்ள மொழிபெயர்ப்பவரையும், பெரிய வேதசாஸ்திரியையும், வியாக்கியானியையும், சுதேசக்கிறிஸ்தவர்கள் இழந்துபோனார்கள். இந்தியாவெங்குமுள்ள கிறிஸ்தவர்கள்யாவரும் அவர்களுடைய மரணத்தினிமித்தம் துக்கங்கொண்டாடுவார்கள். ஆயினும், அவர்கள் தங்கள் ஜீவியத்தில், நல்ல போராட்டம் பண்ணி, ஓட்டத்தை முடித்து, இப்போது பரம எஜமானிடம் சமாதானமாய் இளைப்பாறுகிறார்கள் என்பது மிகவும் ஆறுதலானது.''

சர்க்காரில் உத்தியோகமாயிருக்கும் கிராடியேற்றாகிய
ஒரு சுதேசக் கிறிஸ்தவர் எழுதுகிறதாவது:—

கனம்: S. பால் ரர்வ் சாகிப் ஐயரவர்களின் துக்கப்படத்தக்க மரணத்தில், உங்களுக்கு நேரிட்டிருக்கும் துயரமான நஷ்டத்தைப் பற்றி நாங்கள் மிகவும் துக்கப்படுகிறோம். அவர்கள் இப்பூமியிலிருந்தபோது, இந்த ஜில்லாவிலுள்ள இந்திய சபைக்கு ஒரு பலத்த தூணாகவும், அபூர்வ அலங்காரமாகவும் இருந்தார்கள். சுதேசக் கிறிஸ்தவர்களாகிய நாம் அவர்களில், ஓர் பக்தியுள்ள குருவையும், ஊக்கமுள்ள சாதுரியப் பிரசங்கியையும், ஞானமுள்ள ஓர் ஆலோசனைக்காரரையும், ஓர் சுய சிந்தையுடையவரையும், தமது முன்னறிவினாலும் அப்பியாசத்தினாலும், கிராமச் சபைகளை ஒழுங்குப் படுத்தும் ஞானவானையும், தூய்மையும் மாதுரியமும் நேர்த்தியுமான தமிழ் நூலாசிரியரையும் இழந்துபோனோம். வட திருநெல்வேலி மிஷியோனில், அழிபடக்கூடாத அடையாளத்தை நன்மைக்கென்று அவர்கள் பின்வைத்துப் போயிருக்கிறார்கள்.

"பால் ஐயர்'' என்னும் அவர்களுடைய பெயர் வட திருநெல்வேலியிலுள்ள கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்களல்லாத மற்றவர்களாகிய யாவருடைய வாயிலும் வழங்கும் அருமையான பழக்கச்சொல்லாயிருக்கிறது. தமக்கு அன்பான தம்முடைய நேசதாசனை, அழுகையின் பள்ளத்தாக்கிலிருந்து, கண்ணீரற்ற பரம இராஜ்யத்திற்கு எடுத்துக்கொள்வது நலமென்று நமது பரம பிதாவின் சித்தமாய் இருந்திருக்கிறது.''

"நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு, அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்.'' சங். 37: 37.

"நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து, தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்.'' ஏசா. 57: 2.

"பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன். அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்களென்றெழுது. அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து, இளைப்பாறுவார்கள். அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்.